**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C No.228/2009**

2023 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ஈஸ்வரன் – (அ.சா.–4) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | வயது | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | நாள் | : 29.08.2023 |
| மாவட்டம் | : | | |

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் திருவாண்டபுரத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 1–ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2–ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பமும் என்னுடையது தான். 1–ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2–வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையெழுத்துக்களை எங்கு வைத்து போட்டேன் என ஞாபகமில்லை, திருட்டு வழக்கு என்று மட்டும் தெரியும். 2009 ஆம் வருடம் அந்த கையெழுத்துக்களை போட்டேன். எதற்காக கையெழுத்து போட்டேன் என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 1–ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3. 2–ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4. 1–ம் எதிரி சம்மந்தப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5. 2–ம் எதிரி சம்மந்தப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 30.04.2004 ஆம் தேதி மதியம் சுமார் 3 மணிக்கு நானும், பாலாஜி லாரி ஆபிஸ் இருக்கும் சுரேஷ் என்பவரும் லோடு விபரம் சம்மந்தமாக பாப்பம்பட்டி சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது நெய்க்காரபட்டி பேருந்து நிறுத்தம் அருகே பழனி தாலுகா காவல் ஆய்வாளர் எதிரிகளை விசாரித்துக்கொண்டிருந்தபோது எங்கள் முன்னிலையில் விசாரித்தார். தற்சமயம் 1 மற்றும் 2 எதிரிகள் தாமாக முன்வந்து தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சுரேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான அத்தாட்சியில் நானும், சுரேஷ் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிப்பதாக சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2023.08.31 17:34:06 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.